# கிராமிய மக்களின் வாழ்வியலில் வானொலி : நெடுங்கேணி, மாமடு கிராமசேவகர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு

**சாருமதி. நா., யூட் டினேஸ் கொடுதோர்,சூ.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sharumathy2021@gmail.com

*இன்றைய நவீன உலகில் ஊடகம் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. வானொலி ஊடகமானது செவிவழியாக செய்திகள், தகவல்களைச் சுவாரசியமான முறையில் கொண்டுபோய்ச் சேர்த்து நேயர்களைப் பெரிதும் மகிழ்விக்கும் ஊடகமாகத் திகழ்கின்றது. கற்பனை வழியே ஒரே நேரத்தில் மில்லியன் கணக்கான மக்களைத் தன்னுள்ளீர்க்கும் திறன் கொண்ட வானொலி, உழைக்கும் மக்கள் மத்தியில் தவிர்க்கமுடியாத இடத்தைப் பிடித்துள்ளது. தற்காலத்தில் நவீன ஊடகப்பாவனை அதிகரித்தமையால் வானொலியின் பயன்பாடு குறைந்து செல்வதாகக் கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவ்வாறிருக்க கிராமிய மக்களில் பெரும்பாலானவர்களுக்கு முக்கியமானதாக வானொலி இருப்பது அது கொண்டுள்ள பண்புகளின் காரணம் எனவும் கூறலாம். அந்தவகையில் மாமடு கிராம மக்கள் மத்தியில் தொழில் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் ஊடகத் தெரிவு என்று பார்க்கும்போது அதிகளவில் வானொலியைப் பயன்படுத்தும் தன்மையையே காணமுடிகின்றது. அதனடிப்படையில் கிராமிய மக்களின் வாழ்வியலில் வானொலியின் வகிபங்கு எவ்வாறு அமைகின்றது என்ற வினாவைக் கொண்டமைவதோடு வானொலி கேட்கும் மக்கள் பிரிவு, வானொலியைத் தெரிவுசெய்வதற்கான காரணம், வானொலி கேட்கும் கால அளவு, வானொலி கேட்கும் நேரம் வானொலி கேட்கப்பயன்படும் கருவி, கேட்கும் சந்தர்ப்பம், உள்ளடக்கத்தெரிவு, மக்களின் எதிர்பார்ப்பு, செய்தி மீதான நம்பிக்கைத்தன்மை, மொழியின் புரிதல், வானொலி அலைவரிசைத் தெரிவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதனூடாக கிராம மக்களின் வாழ்வியலில் வானொலி ஊடகத்தின் வகிபங்குகளை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வானது விடய ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. அதனடிப்படையில் முதனிலைத் தரவு சேகரிப்பிற்காக அவதானிப்பு, வினாக்கோவை, நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல் ஆகியனவும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பிற்காக நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையக்கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நெடுங்கேணி, மாமடு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 390 மக்களில் 120 மாதிரிகள் எழுமாற்று முறையில் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வாளரால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 120 மாதிரிகளிலிருந்து வானொலி கேட்பதாக இனங்காணப்பட்ட 45 மாதிரிகளில் இயல்தகைமை அடிப்படையில் 18 மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டு நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன. கிராமிய மக்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முடிவுகள் பகுப்பாய்வு செய்யபட்டன. அதனடிப்படையில் கிராமிய மக்கள் அதிகம் பயன்படுத்துகின்ற ஊடகமாக வானொலி இருப்பதுடன் விவசாயம்சார் தொழில்களில் ஈடுபடும் அதிகமான வயதான ஆண்கள் தமது பொழுதுபோக்கிற்காக வானொலியைக் கேட்கின்றனர் எனும் ஆய்வு முடிவு பெறப்பட்டது. இவ் முடிவுகள்*